தலைப்பு – 290 கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தலைப்பு

தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதன பொறி உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து.	பரிந்துரை.
திறைசேரி கணனி அச்சு SA 10 செலினக் கூற்றிக் பிரகாரம் இலக்கம் 290-1-1-0-2103-0-17 இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை கைப்பற்றல் செலவு விடயத்தின் கீழ் ரூபா 2,047,737 ஆன மூலதன சொத்துக்களை கைப்பற்றுவதற்காக 2024 ஆண்டினுள் செலவிட்ட, திணைக்களத்தின் 2024 நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (ACA 6) கொள்வனவாக அந்த பெறுமதியை இனங்கண்டிருக்காததுடன் அதன் காரணமாக நிதி நிலைமை கூற்றில் ஆதன பொறிகள் மற்றும் சொத்துக்கள் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டது.	மானியமாக இந்த திணைக்களத்திற்கு கிடைத்த சொத்துக்களை கணக்கீடு செய்வத்றகாக 2024 நிதி ஏற்பாட்டை கோரிய போதும் கிடைக்கவில்லை. அதனால், 2025 ஆண்டில் அந்த சொத்துக்களை கணக்கீடு செய்வதற்காக மானியம் தற்போது கோரியுள்ளதென.	மூலதன சொத்துக்காக செலவிடல், நிதியல்லா சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) கட்டுநிதி மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து	பரிந்துரை.
திறைசேரி கணனி அச்சு SA 70 அறிக்கை பிரகாரம் 2024 சனவரி 01 திகதி 257/23 கட்டுநிதிக் கணக்கில் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 17,042,894 ஆன	2023.12.31 திகதிக்கு திணைக்கள வருமானம் சேகரிக்கும் உத்தியோகபூர்வ வங்கி கணக்கிற்கு நேரடியாக	நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் ஏசீஏ–3 படிவத்தை சரியாக தயாரிக்க

போதும் 2024 ஆண்டிற்கான கட்டுநிதி கணக்கு மீதான கூற்றில் ஏசீஏ – 3 படிவம் 2024 சனவரி 01 திகதிக்கு அந்த மீதிக்காக எந்த பெறுமானத்தை குறிப்பிட்டிருக்கவில்லை. மேலும் திறைசேரி கணனி அச்சு SA 71 அறிக்கை பிரகாரம் 257/23 கட்டு நிதிக் கணக்கிற்கு ரூபா 117,000 தொகை 2024 மார்ச் மாதம் திணைசேரியிடமிருந்து கிடைத்திருந்ததுடன் 2024 சனவரி மாதம் ரூபா 17,159,894 தொகை திறைசேரிக்கு பணமாக தீர்க்கப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் ஏசீஏ– 3 படிவத்தை தயாரிக்கும் போது 257/23 கட்டு நிதிக் கணக்கை உட்படுத்தாத காரணத்தால் 2024 நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் ஏசீஏ–3 படிவம் சரியாக இல்லை.	வைப்புச் செய்துள்ள ரூபா 117,000 தொகை இனங்காணப்படாத பெறுவனவு மீதி காணப்பட்டதுடன் 2024 ஆண்டு சனவரி மாதத்தில் அதனை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டது எனினும் தவறுதலாக 257/23 கட்டு நிதிக் கணக்கை 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ–3 படிவத்தில் காண்பிக்க முடியாது போயுள்ளதென.	வேண்டும்.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து.	பரிந்துரை.
(i)	திணைக்களத்தின் இணைந்த விரிவான பரீட்சை மீதி பிரகாரம் திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 840,879,000 மற்றும் கட்டுநிதி தீர்பனவு ரூபா 180,389,576 ஆன போதும் காசுப்பாய்சல் கூற்றில் கட்டுநிதி பெறுவனவு ரூபா 841,595,400 மற்றும் திறைசேரிக்கு தீர்ப்பனவு ரூபா 181,105,977 ஆக காண்பித்திருந்ததால் காசுப்பாய்சல் கூற்றில் கட்டுநிதி பெறுவனவு மற்றும் திறைசேரிக்கு தீர்ப்பனவு கட்டுநிதி மீதிகளில் ரூபா 716,400 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	மாவட்ட அலுவலகத்தினால் சேகரிக்கும் திணைக்கள வருமானம் நேரடியாக திறைசேரிக்கு அனுப்பப்படுவதுடன் 2024.12.31 திகதி சேகரிக்கப்பட்ட ரூபா 716,400 ஆன வருமானத்தை அவ்வாறு திறைசேரிக்கு அனுப்பப்பட்ட போதும் cigas நிகழ்சித் திட்டத்தில் வருமான கிடைப்பனவாக இனங்காண முடியாததுடன் பின்னர் அதனை மாற்று மத்திரமொன்றின் மூலம் சரியாக இனங்காணப்பட்டது. அதனால், இணைந்த விரிவான பரீட்சை மீதியில் இது உள்ளடக்கப்படாததால் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது ரூபா 716,400 உள்ளிட்ட சரியான பெறுமதிகள் பிரதிபலிக்கப்பட்டது.	காசுப்பாய்ச்சல் கூற்றில் கட்டுநிதி பெறுவனவு மற்றும் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட கட்டுநிதி மீதி சரியாக காண்பிக்கப்பட வேண்டும்.

(ii) 2024 திசெம்பர் 16 திகதி இலக்கம் 06/2024 கொண்ட அரச கணக்குகள் திணைக்களத்தின் பொது நிதி வழிகாட்டி இலக்கம் 7.7 பிரிவின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று காசு மற்றும் குருக்கு குறிப்பு ஆகிய இரண்டையும் கவனத்திற் கொண்டு நேர் முறையின் கீழ் தயாரிக்க வேண்டிய போதும், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் காசுப் பாய்ச்சல் கூற்று காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டு இருந்தது.	எதிர்வரும் ஆண்டுகளில் பொது நிதி வழிகாட்டி பிரகாரம் நிதிக்கூற்றக்களை தயாரிக்குமாறு உத்தியோகத்தர்கள் அறிவுருத்தப்பட்டனர்.	பொது நிதி வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ) நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத கிடைப்பனவின் கீழ் திறைசேரி கட்டுநிதி பெறுவனவு மற்றும் திறைசேரிக்கு அனுப்பிய பெறுமதியை வெவ்வேறாக காட்ட வேண்டிய போதும், 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக நிதி செயலாற்றல் கூற்றில் 2024 ஆண்டில் ரூபா 841,595,400 ஆன மொத்த திறைசேரி கட்டுநிதி பெறுவனவு பெறுமதியில் ரூபா 181,105,977 ஆன திறைசேரி அனுப்புதல் பெறுமதி குறைத்து ரூபா 660,489,423 ஆன தேறிய திறைசேரி கட்டுநிதி பெறுவனவு வருமானமல்லாத பெறுவனவின் கீழ் திறைசேரியிடம் இருந்து கிடைத்த கட்டுநிதியாக காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது சதியான பெறுனங்களை இனங்காணுமாறு குறித்த உத்தியோகத்தர்களிற்கு அறிவுரை வழங்கப்பட்டது.	நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத கிடைப்பனவின் கீழ் திறைசேரி கட்டுநிதி பெறுவனவு மற்றும் திறைசேரிக்கு அனுப்பிய பெறுமதியை வெவ்வேறாக காட்ட வேண்டும்.

(உ) கணக்காய்வு சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
(i) கப்பல் அவதானிப்பு பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக பரீட்சிப்பை மேற்கொளவதற்காக கப்பல் அவதானிப்பு பிரிவின் தகவல்களை	கணக்காய்வு பிரிவிற்கு புதிய VMS பயணர் கணக்கொன்றை வழங்குவதற்காக மேலதிக கொடுப்பனவை செய்து குறித்த	கப்பல் அவதானிப்பு பிரிவினால் தகவல்களை பார்ப்பதற்காக

பார்ப்பதற்கு (view only) பயனர் பெயர் கணக்காய்வு பிரிவிற்கு வழங்கியிருக்கவில்லை. அதன் காரணமாக கப்பல் அவாதானிப்பு பிரவின் செயற்பாடுகளை பரீட்சிக்க முடியாதிருந்தது.	கம்பனியிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும். அவ்வாறே தனிப்பட்ட தரவுகள பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் VMS உபகரணங்களை பொருத்தும் சந்தர்ப்பத்தில் இணங்காத சில தரப்பினரிற்கு VMS போன்ற உணர்வுபூர்வ தரவுகளை வழங்கும் போது குறித்த படகு உரிமையாளரின் (Data Submit) அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் அதனால் தற்போது தேவைான தரவுகளை கோரினால் அந்த சந்தர்ப்பத்தில் அந்த தகவல்ளை வழங்க முடியுமென அறிவிக்கிறேன்.	(view only) பயணர் பெயரொன்று அரச கணக்குகள் பிரிவிற்கு வழங்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம்.

பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
(அ)	2021 நவம்பர் 24 திகதிய 2255/22 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடும் கட்டளை பிரகாரம் 05 ஐந்து முக்கிய செயற்பாடுகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்க முடியுமான 53 சந்தர்ப்பங்களிற்காக அரச வருமானம் சேகரிப்பதற்கான சட்டத்தை விதிப்பதற்குரிய கட்டளை அமைசரினால் விநியோகிக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் போது முன்கூட்டிய இலகமிடலுடன் விசேட கடதாசியில் அனுமதிப்	2021 நவம்பர் 24 திகதிய 2255/22 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளவாறு 53 சந்தர்ப்பங்களின் கீழ் வருமான சேகரிப்பு மேற்கொள்ளப்படும். அவ்வாறு சேகரிக்கப்படும் வருமானத்திற்குரிய அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஒவ்வொறு பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் எமது திணைக்கள வங்கிக் கணக்கில் ஒன்றுசேரும் தொகை நிகழ்நிலை முறையூடாக சேகரித்துள்ள வருமானத்தை இலகுவில் ஒப்பிட முடியும்.	அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான போதிய உள்ளக கட்டுப்பாடொன்றை செயற்படுத்த வேண்டும்.

பத்திரத்தை விநியோகிக்காததால் அரசிற்கு வருமானம் இல்லாது அனுமதிப்பத்திரம் வழங்க சந்தர்ப்பம் காணப்படுவதுடன் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சேகரித்திருந்த ரூபா 173,842,450 ஆன வருடாந்த அனுமதிப்பத்திர வருமானக் கட்டணம் விநியோகித்திருந்த அனைத்து அனுமதிப் பத்திரங்களிற்குமான வருமானமென இணக்கம் செய்ய முடியாததால் மேற்குறித்த வருடாந்த அனுமதிப் பத்திர கட்டண வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியவில்லை.		

3.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
(அ)	மீளாய்வாண்டில் 290-1-1-14-1504-0/11 செலவு விடயத்திற்காக ரூபா 800,000,000 குறைநிரப்பு நிதி ஏற்பாட்டை பெற்றிருந்ததுடன் அவற்றில் 88 சதவீதம் அதாவது ரூபா 708,729,543 ஆன நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	2024 ஒக்டோபர் 15 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2024 ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் 06 மாத காலத்திற்கு செயற்படுத்திய கடற்தொழில் கைத்தொழிலை சுமுகநிலைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒக்டோபர் முதல் திசெம்பர் மாதம் வரை செலுத்த நேரிடும் என எதிர்பார்க்கப்பட்ட விண்ணப்பங்களிற்காக ரூபா 800 மில்லியன் குறைநிரப்பு நிதி ஏற்பாடு பெறப்பட்டது. எனினும் மீனவர் சமூகத்திற்கு இந்த கொடுப்பனவு செயன்முறைக்கு இணங்கிச் செல்ல ஒருசில காலம் எடுத்ததால் வவுசர்களை சமர்ப்பிப்பதில் சில தாமதம் ஏற்பட்டது. அதனால், 2024 திசெம்பர் 31 திகதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களிற்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டதால் நிதி ஏற்பாடு எஞ்சியுள்ளது.	சரியானதும் நடைமுறை சாத்தியமானதுமான மதிப்பீட்டினை தயாரிக்க வேண்டும்.

(ஆ)	2024 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மீண்டுவரும் செலவு விடயங்கள் 3 மூலதன செலவு விடயம் 2 இற்காக பெற்றிருந்த ரூபா 844,500,000 ஆன தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 752,587,016 ஆன நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது. அந்த சேமிபபு தேறிய நிதி ஏற்பாட்டின் 84 சதவீதத்திற்கும் 100 இற்கும் இடையிலான சதவீதத்தை எடுத்திருந்தது.	மீண்டுவரும் செலவு விடயங்களில் நிதிஏற்பாடு எஞ்சுவதற்கு பயனுள்ள ஆயட்காலத்தை விஞ்சியுள்ள இயந்திரங்களின் திருத்த உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்படுவது மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக அமைந்துள்ளதுடன் மூலதன செலவு விடயங்களில் நிதிஏற்பாடு எஞ்சுவதற்கு 2103 இன் கீழ் ரேடியோ இயந்திரங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக அறிவுரை பெற்றுக் கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளமையும் 2106 இன் கீழ் கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்ட Cloud Server தொகுதிக்காக மாதாந்தம் கொடுப்பனவு செய்ததனை மீண்டுவரும் செலவாக இனங்காணப்பட்டது.	சரியானதும் நடைமுறை சாத்தியமானதுமான மதிப்பீட்டினை தயாரிக்க வேண்டும்.

3.3 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
(i)	நிதிப்பிரமாணம் 571(3) பிரகாரம், திணைக்களத்தல் 02 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 36,085,002 ஆன வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது அரச வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	6000–0–0–16–0–47 கொண்ட ஒப்பந்த நிறுத்தி வைத்தல் வைப்புக் கணக்கில் ரூபா 2,141,459 தொகை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட படகு அவதானிப்பு தொகுதி கட்டிடத்திற்குரிய ஒப்பந்த நிறுத்தி வைத்தல் தொகையாவதுடன் அத் தொகை கட்டிட குறைபாடுகளை செய்வதற்காக நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்டது. 6000–0–0–2–0–96 கொண்ட டென்டர் வைப்புக் கணக்கின் மீதி தற்போது தீர்க்கப்பட்டுள்ளது.	ஆண்டு 02 இனை விஞ்சிய வைப்பு மீதிகளை அரச வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	இலக்கம் 6000-0-0-13-0-64 கொண்ட பைப்புக் கணக்கில் 02 ஆண்டுகளை விஞ்சிய மீதி தனியார் நிறுவனமொன்றிற்கு படகு அவதானிப்பு தொகுதி கட்டணம் செலுத்துவதற்காக 2022 ஆண்டில் படகு உரியையாளர்களிடமிருந்து கிடைத்த தொகையிலிருந்து	இந்த பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடிய போது இந்த அவதானிப்பு தொகுதி கட்டணம் செலுத்துவதற்காக கப்பல் உரிமையாளர்களிடமிருந்து சேகரிக்கும் தொகை ஒதுக்கமொன்றாக பேணிக் கொள்ளுமாறு திறைசேரி திட்டமிடல் திணைக்களம் அறிவுரை வழங்கியது. அதனால் பழைய படகு அவதானிப்பு	ஆண்டு 02 இனை விஞ்சிய வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது அரச வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எஞ்சிக் காணப்படும் தொகை ஆவதுடன் அத் தொகையை தீர்ப்பதற்கு அல்லது அரச வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்காது அந்த வைப்பு மீதி தற்போது படகு அவதானிப்பு தொகுதி சேவை வழங்கும் வேறொரு தனியார் கம்பனிக்கு படகு அவதானிப்பு கட்டணம் செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.	தொகுதியில் காணப்பட்ட சமமாக படகு உரிமையாளர்களிடமிருந்து சேகரிக்கும் தொகையை அரச வருமானத்திற்கு செலவு வைக்காது எதிர்வரும் கொடுப்பனவிற்ாக நிறுத்தி வைக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
2024 ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கும் ரூபா 25 மில்லியனான படகு மற்றும் இயந்திர உபகரணங்களை கையகப்படுத்துவதற்காக 100 சதவீத செயலாற்றுகையை எதிர்பார்த்த போதும், அது தொடர்பாக எவ்வித பௌதீக செயலாற்றுகையையும் அடைந்து கொண்டிருக்கவில்லை.	ஜப்பானின் தனியார் கம்பனியொன்றிற்கு ஒப்பந்தத்தை வழங்கியுள்ள போதும் அந்த கம்பனியின் உள்நாட்டு முகவர் கம்பனியுடன் திணைக்களம் இதற்கு முன்னர் கொள்வனவு செய்த ரேடியோ இயந்திரம் தொடர்பாக நியாயத் தீர்ப்பிற்கு சென்றுள்ளதால் அந்த முகவருடன் இந்த கொள்வனவு தொடர்பாக சட்ட ரீதியான இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ள இந்த பிரச்சனையை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதால் இந்த கொள்வனவை செய்யவில்லையென.	செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் திட்டமிட்டவாறு இயந்திர மற்றும் உபகரணங்களை கையகப்படுத்தல்களின் பௌதீக செயலாற்றுகையை போதியளவு அடைந்து கொள்ள வேண்டும்.

4.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
2025 மார்ச் 12 திகதிய இலக்கம் DFAR/INV/AUDIT/2024-VOIII கொண்ட கடிதம் மூலம் கணக்காய்விற்கு சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் 2024 ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு எண்ணிக்கை 217 ஆன போதும் செயலாற்றுகை அறிக்கையின் 2.1 அத்தியாயத்தில் 11 புலனாய்வு நடவடிக்கைகளின் முன்னேற்றங்களின் கீழ் VMS	ஆரம் விடயங்கள் பரீட்சிப்பின் பின்னர் மீண்டும் பயணத் தடவைகளை வழங்கும் சந்தர்ப்பங்களும் உள்ளடங்களாக மேற்கொள்ளப்பட்ட மொத்த புலனாய்வு எண்ணிக்கை செயலாற்றுகை அறிக்கையில் முன்னேற்றமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.	செயலாற்றுகை அறிக்கையிற்கு சரியான தகவல்களை உள்ளடக்க வேண்டும்.

மூலம் சட்ட மீறளிற்கான புலனாய்வு 800 ஆன இலக்கை 2024 ஆண்டில் அடைந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

4.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து.	பரிந்துரை.
(அ)	அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1 (அ) பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் அங்கத்தவர்கள் கூட்டாகவும் தனியாகவும் எடுக்கும் முடிவுகளின் பால் பொறுப்பேற்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும் 2019 ஆண்டில் திணைக்களத்திற்கு தேவையான 07 ஒலிபரப்பு தொலைத் தொடர்பு உபகரங்களை உரிய அளவுத் திட்டங்களிற்கு இணங்க கட்டளையிட்டிருக்கையில் அந்த அளவுத் திட்டங்களிற்கு இணங்காத ஒலிபரப்பு தொலைத் தொடர்பு உபகரணங்களை வழங்கியிருந்தமை மற்றும் அதற்காக ரூபா 7,084,000 தொகையை செலுத்த தொழில்நுட்ப மிதிப்பீட்டுக்குழு பரிந்துரைத்த காரணத்தால் பெறுகைகள் செயன்முறை தாமதித்மை மற்றும் அரசிற்கு நட்டம் ஏற்பட்டிருந்த போதும் திணைக்களத்தினால் கணக்காய்வு திகதி வரை அந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அங்கத்தவர்களிற்கு எதிராக எந்தவித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. மேலும் 2020 பெப்ரவரி 24 மற்றும் 2020 மே 26 திகதிகளில் அத்தொகையை மீண்டும் திணைக்களத்திற்கு செலுத்துமாறும் இல்லையெனில் சட்ட நடவடிக்கை எடுப்பதாக நிறுவனத்திற்கு அறிவித்துள்ள போதும் 05 ஆண்டுகள் நடந்துள்ள போதும் இப் பிரச்சினையை தீர்த்துக் கொண்டிருக்கவில்லை.	ஒலிபரப்பு தொலை தொடர்பு இயந்திரங்களில் பயன்படுத்தும் போது ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் ஒரு ஒலிபரப்பு தொலை தொடர்பு இயந்திரத்தில் உரிய தொழிற்பாட்டை உறுதி செய்து கொள்ள குறைந்தபட்சம் இரண்டு வார காலமாவது செயற்படுத்திப் பார்க்க வேண்டும். அவ்வாறாயினும் இந்த இயந்திரங்களில் பிரச்சினை ஏற்படுவதல், அவற்றை பொருத்தி இனங்காணப்பட்டது. இது வரை நியாய தீர்பின் இறுதி முடிவு கிடைத்திருக்கவில்லை.	மீன்பிடி செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த ஒலிபரப்பு தொலைத் தொடர்பு உபகரணங்கள் அத்தியவசியம் ஆகையால் அவற்றை முழுமையான செயற்படு நிலையில் பேணிக் கொள்ள வேண்டும்.

(ஆ)	திணைக்களத்திற்கு 250W கொள்ளளவைக் கொண்ட 05 ஒலிபரப்பு தொலைத் தொடர்பு உபகரணங்களை மீண்டும் கொள்வனவு செய்ய 2024 பெப்ரவரி மாதம் பெறுகைகள் நடவடிக்கையை ஆரம்பித்திருந்த போதும் 2025 மே 20 திகதி வரை அந்த பெறுகைகள் நடவடிக்கை நிறைவடைந்து இருக்கவில்லை. திணைக்களத்தினால் சர்வதேச விலைமனு கோரும் செயன்முறையின் கீழ் 250W கொள்ளளவைக் கொண்ட 05 ஒலிபரப்பு தொலைத் தொடர்பு உபகரணங்களிற்காக ஜப்பான் கம்பனி ஒன்றை தெரிவு செய்திருந்த போதும் அதன் உள்நாட்டு முகவர் மேற்படி 2019 ஆண்டில் ஒலிபரப்பு தொலைத் தொடர்பு உபகரணங்களை கொள்வனவு செய்த நிறுவனமாகவுள்ள காரணத்தால் ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிட்டிருக்கவில்லை. அவ்வாறே அது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்கள அறிவுரையை பெற்றுக் கொள்வதற்காக ஈடுபட்டிருந்த போதும் மீன்பிடி படகு மற்றும் தரைநிலத்திற்கு இடையே ஒலிபரப்பு தகவல் தொலைத் தொடர்பு வசதிகளை வழங்குதல் எனும் முக்கிய பணி கணக்காய்வு திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆண்டில் கொள்வனவு செய்ய டென்டர் அழைப்பிக்கும் போது முன்வந்த நான்கு கம்பனிகளிற்கிடையே பெறுகைகள் குழுவினால் டென்டர் வழங்கப்பட்ட ஜப்பான் கம்பனியின் இலங்கை முகவர் தனியார் கம்பனியினால் மீன்பிடி திணைக்களத்துடன் காணப்படும் முன் உடன்படிக்கையை நிறைவு செய்யாத பிரச்சினையின் மீது அது இதுவரை செயற்படுத்தப்படவில்லை.	மீன்பிடி செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த ஒலிபரப்பு தொலைத் தொடர்பு உபகரணங்கள் அத்தியவசியம் ஆகையால் அவற்றை முழுமையான செயற்படு நிலையில் பேணிக் கொள்ள வேண்டும்.

4.4 நட்டம் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து.	பரிந்துரை.
(அ)	நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (i) நட்டம் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்றில் உள்ளடங்கும் ரூபா 16,519,961 ஆன அமைச்சின் கட்டிடத்தில் 06 ஆம் மாடியில் நீர் கசிவதால் ஏற்பட்ட சேதத்தை திணைக்களத்தினால் பராமரிக்கும் சேத மற்றும் நட்ட பதிவேட்டில் உட்படத்தியிருக்காததுடன்	6 ஆம் மாடியில் மழைநீர் கசிவதால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நி.பி. 104 கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் குழு அறிக்கை 2023.06.30 திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மீளாய்வுக் குழு அறிக்கை 2023.10.10 திகதி மீன்பிடி அமைச்சு குழு ஊடாக ஏற்பட்ட	சேத நட்ட பதிவேட்டை நாளாதுவரையாக பேணிக் கொள்ள வேண்டும்.

	நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினரை தெளிவாக இனங்கண்டு அரசிற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நட்டம் தொடர்பாக வழங்கும் பரிந்துரை பிரகாரம் சேத நட்ட பதிவேட்டில் பதிவழிக்க நடவடிக்கை எடுக்க முடியும்.	
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் நட்ட சேத பெறுமதி ரூபா 250,000 விட அதிக நட்டத்தை கணக்கீட்டு உத்தியோகத்தரால் சேத நட்ட பதிவேட்டிலிருந்து பதிவழிக்க அங்கீகரிக்க வேண்டிய போதும் திணைக்களத்தின் தங்கல்ல மாவட்ட மீன்பிடி அலுவலகத்தின் அலுவலக கட்டிடம் 2023 ஆகஸ்ட் 22 திகதி தீபற்றிற்கு உள்ளாகியிருந்த காரணத்தால் ஏற்பட்ட ரூபா 2,043,000 ஆன நட்டத்திலிருந்து ரூபா 306,450 தொகையை அறவிட்ட பின்னர் எஞ்சிய ரூபா 1,736,550 தொகையை திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை மீது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.	இந்த நட்டத்தை பதிவழிக்க அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்குமாறு குறித்த விடயப் பொறுப்பு உத்தியோகத்தரிற்கு அறிவுரை வழங்கியுள்ளதுடன் சுற்றறிக்கை பிரகாரம் அமைச்சின் செயலாளரிற்கு அங்கீகாரத்திற்கு அனுப்ப வேண்டிய எல்லைகள் தொடர்பாக உத்தியோகத்தர்களை அறிவுருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	கொழும்பு மாவட்ட மீன்பிடி அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு சேவையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரிற்கு 2022 மே 18 திகதி வழங்கியிருந்த மடிக் கணனி 2024 செப்டம்பர் 03 திகதி திருடப்பட்டுள்ளமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் திணைக்களத்தினால் விசாரணை ஒன்றை நடாத்தியிருந்ததுடன் அந்த நட்டத்தை நட்டம் மற்றும் சேத பதிவேட்டில் உட்படுத்தியிருந்த போதும் 2024 நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.	தவறுதலாக நி.பி. 104 விசாரணை ஒன்றை நடாத்த முடியாது போனதால் 2025.03.18 திகதி அதற்காக குழுவொன்றை நியமிக்கப்பட்டது. விசாரணை நடவடிககைகள் முடிவடைந்த பின்னர் கிடைக்கும் அறிக்கை பிரகாரம் முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.	நட்ட சேதம் தொடர்பாக பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து.	பரிந்துரை.
(அ) ஒலிபரப்பு தொலைத் தொடர்பு உபகரணங்களை கொள்வனவு செய்தல்			
(i)	திணைக்களத்தின் மீன்பிடி செயற்பாட்டு பிரிவினால் நடாத்தப்படும் 19 தேடுதல் செயற்பாட்டு நிலையங்களினால் பயன்படுத்தப்படும் ஒலிபரப்பு இயந்திரங்கள் மிகவும் பழைய இயந்திரமாவதுடன் அவற்றில் கொழும்பு, மிர்ஸ்ஸ, நில்வெல்ல, கரிந்த ஆகிய 04 தேடுதல் செயற்பாட்டு நிலையங்களில் ஒலிபரப்பு இயந்திரங்கள் 2024 திசெம்பர் 31 திகதியளவில் செயலிழந்து காணப்பட்டது. இன்னும் 06 தேடுதல் நிலையங்களில் பயன்படுத்தும் ஒலிபரப்பு இயந்திர்ங்கள் 20 ஆண்டுகளை விட பழைய இயந்திரங்களாவதுடன் அந்த இயந்திரங்களின் செயற்பாடு 50 சதவித மட்டத்தில் காணப்பட்டது. இந்த பழைய ஒலிபரப்பு இயந்திரத்தை உற்பத்தி செய்திருந்த நிறுவனத்தினால் அந்த மொடலிலான ஒலிபரப்பு இயற்திரங்களை உற்பத்தி செய்வதை நிறுத்தியுள்ளதால் அந்த இயந்திர திருத்த வேலைகள் மேற்கொள்வதும் கடினமாகவிருந்தது.	தற்போது திணைக்களம் பயன்படுத்துவது 10 ஆண்டுகளை விட பழைய ஒலிபரப்பு இயற்திரமாவதுடன் அவை முழுமையான வினைத்திறனுடன் செயற்படுவதில்லை. ஐந்து புதிய ஒலிபரப்பு இயந்திரங்களை கொள்வனவு செய்ய பெறுகைகள் நடவடிக்கை மேற்கொண்ட போதும் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக இதுவரை பெறுகைகள் செயற்பாடடினை நிறைவு செய்ய இயலாதுள்ளது.	பெறுகை செயற்பாடுகளை நிறைவு செய்து மீன்பிடி படகு மற்றும் தரைநிலத்துடன் ஒலிபரப்பு தகவல்களை தொலை தொடர்பு வசதிகளை விரைவில் அமைக்க வேண்டும்.
(ii)	திணைக்களத்தினால் 2019 ஆண்டில் ரூபா 12,397,000 பெறுமதியான 07 ஒலிபரப்பு தொலைத் தொடர்பு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ஒரு ஒலிபரப்பு இயந்திரம் மாத்திரம் 100W கொள்ளளவுடன் செயற்படுவதுடன் அதன் வலுப் பகுதி செயற்படவில்லையென 2025 பெப்ரவரி 24 திகதிய இலக்கம் DFAR/F/1/4/1-பகுதி கொண்ட கடிதம் மூலம் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2019 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 400W அதிசக்திவாய்ந்த 07 ஒலிபரப்பு இயந்திரங்கள், 2024 திசெம்பர் 31 திகதிவரை முழுமையாக செயற்படும் நிலையில் இருக்கவில்லை.	இந்த ஒலிபரப்பு இயந்திரங்களை வழங்கிய நிறுவனம் டெண்டர் அளவுத் திட்டங்களிற்கு இணங்காத வகையில் பண்டங்களை வழங்கியுள்ளமை அவற்றை பொருத்தி செயற்படு நிலையில் உள்ளதனை காண்பிக்க முடியாத காரணத்தால் இந்த ஒலிபரப்பு இயந்திரங்கள் தொடர்பான பிரச்சினை நியாய தீர்ப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது. நியாய தீர்பு செயன்முறையின் இறுதி தீர்ப்பிற்கு இதுவரை வரமுடியாததால் இந்த ஒலிபரப்பு இயந்திரங்களை முழுமையாக பொருத்தவில்லை. எனினும் தற்போது இந்த ஒலிபரப்பு	மீன்பிடி செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த ஒலிபரப்பு தொலைத் தொடர்பு உபகரணங்கள் அத்தியவசியம் ஆகையால் அவற்றை முழுமையான செயற்படு நிலையில் பேணிக் கொள்ள வேண்டும்.

		இயந்திரங்களை செயற்படு நிலைக்கு கொண்டுவர தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.	

(ஆ) பல நாள் மீன்பிடிப் படகுகளிறிகான அவதானிப்புத் தொகுதி (VMS) உபகரங்களை பொருத்துதல்

(i)	2021 ஆண்டில் அவுஸ்திரேலிய உதவியின் கீழ் வழங்கப்பட்ட 4200 படகுகள் அவதானிப்புத் தொகுதி உபகரங்கள் எந்தவித கட்டணமும் அறவிடாது பல நாள் மீன்பிடிப் படகுகளில் இலவசமாக பொருத்த வேண்டுமென திணைக்களம் தீர்மானித்திருந்ததுடன் 2024 ஒக்டோபர் 31 திகதி வரை அவ்வாறு படகுகள் அவதானிப்புத் தொகுதி உபகரணங்கள் பொருத்தியிருந்த பல நாள் மீன்பிடி படகுகளின் எண்ணிக்கை 4084 ஆனது. மேலும் 25 உபகரணங்கள் அவசர தேவைப்பாட்டிற்கு பயன்படுத்துவதற்காக வைத்திருந்ததுடன் 2024 ஒக்டோபர் 31 திகதி வரை 91 உபகரணங்கள் பொருத்தாது எஞ்சியிருந்தன. 2021 ஆண்டில் கிடைத்த இந்த உபகரணங்கள் 2024 ஆண்டிறுதி வரை பொருத்துதல் நிறைவடையாததன்க காரணமாக வெளிநாட்டு மானியங்களினால் கிடைக்கும் நிவாணத்தை மீன்பிடி மக்களுக்கு உரியவாறு வழங்க முடியாதிருந்தது.	2021 ஆண்டிற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட அனைத்து பல நாள் மீன்பிடிப் படகுகளிற்கும் இலவசமாக படகுகள் அவதானிப்புத் தொகுதி உபகரணங்கள் பொருத்தும் யெற்திட்டத்தின் செயற்திட்ட காலஎல்லையாக ஆரம்பத்தில் (03) மூன்று வருடங்கள என தீர்மானிக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்தை திட்டமிடும் போதே இதற்காக நீண்ட காலம் எடுப்பதாக அவதானிக்கப்பட்டது. தீவின் அனைத்து மீன்படி துறைமுகங்களிலிருந்தும் படகுகள் செயற்படுத்தல், மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடையே படகுகளிற்கு உபகரணங்களை பொருத்த நேர்ந்தமை, மீன்வர்களை அறிவுருத்த வேண்டிய ஏற்பட்டமை, இதற்கு முன்னர் முதலாவதாக படகுகள் அவதானிப்பு தொகுதியை பொருத்தும் போது மீனவர்களினால் பாரிய எதிர்ப்பு ஏற்பட்டிருந்தமை இந்த செயற்திட்டதின் காலத்தை தீர்மானிக்கும் போது கவனத்திற்கு கொள்ள நேர்ந்தது. அவ்வரே இந்த உபகரணங்கள் குறித்த நாட்டில் உற்பத்தி செய்து இறக்குமதி செய்ய வேண்டி ஏற்பட்டதுடன் அதனால் ஒரே தடவையில் அனைத்தும் கிடைக்காததுடன் தொகுதிகளாக இந்த நாட்டிற்கு வழங்கப்பட்டன.	வெளிநாட்டு மானியங்களினால் கிடைக்கும் நிவாரணங்களை மீனவ மக்களிற்கு உரியவாறு வழங்க வேண்டும்.

(இ) 50 சதவீத நிவாரண முறையின் கீழ் பல நாள் மீனவ படகுகளை நிர்மாணித்தல்

(i)	50 சதவீத நிவாரண முறையின் கீழ் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ரூபா 26 மில்லியன் பெறுமதியான 55 அடி 10 பல நாள் மீனவ படகுகளை நிர்மாணிப்பதற்கும் அந்த 10 பல நாள் மீனவ படகுகளின் மொத்தக் கிரயத்தின் 50 சதவீதம் அதாவது ரூபா 130	எஞ்சிய இரண்டு படகுகளின் உற்பத்தி நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு அமைச்சினதும் தலையீட்டின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக 2024.09.27 திகதி கடற்தொழில் அமைச்சு, மீன்பிடி மற்றும் நீரியல்வள திணைக்களம், சீநோர் அமைப்பின் மற்றும் தனியார் நிறுவனத்தின் உரிய	அரசின் நோக்கம் அடையப்பெறும் வகையில் படகு நிர்மாண நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்பார்வை, உடன்படிக்கை பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிட

மில்லியனும் வெட் பரியின் 50 சதவீதம் அதாவது ரூபா 19.5 மில்லினும் அரசினால் மேற்கொள்வதற்காகவும் 2016 ஜுன் 28 திகதி அப இலக்கம் 16/1233/725/020-I கொண்ட அமைச்சரவை முடிவின் ஊடாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 5 படகுகள் சீநோர் அமைப்பிடம் நேராக நிர்மாணித்துக் கொள்ளவும், ஏனைய 05 படகுகளை சீ-நோர் அமைப்பின் மேற்பார்வையின் கீழ் கடற்தொழல் மற்றும் நீர்வளங்கள் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள தனியார் துறையின் படகுகள் நிர்மாணிக்கும் நிறுவனமொன்றின் ஊடாக நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2025 மே 20 திகதி வரை அந்த 10 படகுகளில் 8 இனை நலன்பெறுனர்களிற்கு ஒப்படைத்திருந்ததுடன் தனியார் நிறுவனத்தின் மூலம் நிர்மாணித்துக் கொள்ளவதற்கு உடன்படிக்கைகளிற்கு உட்பட்டிருந்த 02 படகுகள் கணக்காய்வு திகதிய வரை 08 ஆண்டுகள் கடந்திருந்த போதும் உற்பத்தி நடவடிக்கைகளை நிறைவு செய்து நலன்பெறுனர்களிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2024 ஜுன் 24 திகதிய பணிப்பாளர் நாயகத்தின் மீநீதி/மீகூ/அடி55/2023, சம இலக்கமுடைய கடிதம் பிரகாரம் ஒரு நாளைக்கு ரூபா 247,000 வீதம் தாமதக் கட்டணம் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்த போதும் படகுகளை பூர்த்தி செய்து ஒப்படைக்க அல்லது தாமதக் கட்டணத்தை அறவிடவேனும் எந்தவித நடவடிகைகையையும் எடுத்திருக்கவில்லை. இந்த 2 பல நாள் மீன்படி படகுகளிற்காக அரசினால் வழங்கும் 50 சதவீத பங்களிப்பாக ரூபா 29,900,000 தொகையை படகு உற்பத்தி உத்தியோகத்தருடன் கலந்துரையாடியதுடன் படகுகள் உற்பத்தி நடவடிக்கைகளை நிறைவு செய்ய சலுகை காலமொன்றை வழங்க இணக்கப்பாடு ஏற்பட்டது. படகுகளின் உற்பத்தி நடவடிக்கைகளை நிறைவு செய்து கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதால் தண்டப்பணம் அறவிட அல்லது படகுகளை மீள் பொறுப்பேற்றல் இடம்பெறவில்லை. சீநோர் அமைப்பின் ஊடாக குறித்த படகுத்தளத்திறகு பணம் செலுத்தப்பட்டது. 50 சதவீத பங்களிப்புத் தொகைக்குரிய வெட் பெறுமதியற்றதாக செலுத்தியுள்ளதால் அந்த நலன்பெறுனரிற்கு வெட் தொகையை உடனடியாக செலுத்துமாறு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டது. 2 படகுகள் மியன்மார் மற்றும் சீசெல்ஸ் அரசாங்கங்களினால் கைது செய்யப்பட்டிருந்ததுடன் IMULA1028TLE படகை தியோகோ ஆசிய அரசின் கடல் எல்லைக்கு உட்பிரவேசித்த காரணத்தால் கைது செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய படகுகள் தொடர்ந்தும் மீனவ கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளன.

மற்றும் தாமதம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் நலன்பெறுனர்கள் இடமிருந்து கிடைக்க வேண்டிய பங்களிப்புத் தொகையை கால தாமதமின்றி அறிவட மற்றும் செயற்திட்ட நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனியார் கம்பனி ஒன்றிற்கு செலுத்தியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக இந்த படகுகளிற்காக நலன்பெறுனரின் பங்களிப்பினால் அறவிட வேண்டிய வெட் தொகையை, 2025 மே 20 திகதி வரை கூட்டுத் தொகை ரூபா 11,900,000 ஆனது. உற்பத்தியை பூரணப்படுத்தி செய்த 07 படகுகள் (01 தீப்பற்றி அழிவடைந்திருந்தது) குறித்த உரிமையாளர்களிற்கு ஒப்படைத்து 5 ஆண்டுகள் கடந்த போதும் அந்த படகுகள் தொடர்ந்தும் உரிமையாளர்களிற்கு முறையாக ஒப்படைத்திருக்காததுடன் தொடர்ந்து மீன்பிடி கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தது 05 படகுகள் மாத்திரமே.

(ஈ) களப்பு எல்லைகளை குறியிடும் செயற்திட்டம்

(i) களப்பு எல்லைகளை குறியிடல் செயற்திட்டத்தின் கீழ் 07 மீனவ மாவட்டங்களில் 9 களப்புகளிற்காக 18,071 தூண்கள் கட்டளையிடப்பட்டு இருந்தன. அவற்றின் ரூபா 21,176,486 தொகையான 14,636 தூன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 வரை அவற்றின் ரூபா 11,515,615 பெறுமதியான 7948 இனை களப்பு எல்லைகளை குறியிடுவதற்காக நடப்பட்டிருக்கவில்லை. சலாபம் களப்பிற்காக 1,784 தூண்கள் தேவையென இனங்காணப்பட்டிருந்த போதும் பெறுகைகள் செயன்முறையின் போது 4060 தூண்களாக தவறாக குறிப்பிட்டதனால் எஞ்சிய 2,164 தூண்கள், ரூபா 1,895,448 தெகையை செலுத்தி புத்தளம் களப்பிற்கு பேக்குவரத்து செய்யப்பட்டிருந்தன. முந்தலம களப்பிற்காக உற்பத்தி செய்யப்பட்ட 3030 தூண்களை முறையா ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடாது சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கி அதற்காக ரூபா 1,435,000 செலுத்தப்பட்டு இருந்தது. 2024 திசெம்பர் 31 வரை அவற்றின் 1595 தூண்களை நடப்பட இருந்தன.

சிலபம் களபிற்காக 1784 எல்லை தூண்களுக்கு பதிலாக 4060 தூண்கள் என கடிதத்தை அச்சிடும் போது குறிப்பிடப்பட்டதனால் 2164 கூடுதலான தூன்களை ரூபா 1,895,448 தொகை செலவிடப்பட்டு புத்தளம் களப்பிற்கு போக்குவரத்து செய்யப்பட்டுள்ளது. முந்தலம் களப்பில் 1595 எஞ்சிய தூன்களை நடுவதற்கு வடமேல் உள்ளூராட்சி ஆணையாளரினால், உள்ளூராட்சி ஊழியர்களை ஈடுபடுத்த முடியுமென அறிவித்திருந்த போதும், மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டு இருக்காததனால் பதிவு செய்யப்பட்ட மீனவ அமைப்பு சங்கங்களினால் இந்த கடமையை செய்து கொள்ள பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

எஞ்சியுள்ள தூண்களை கால தாமதமின்றி களப்பு எல்லைகளை குறியிடுவதற்காக பயன்படுத்த வேண்டும். நிதிப்பிரமாணம் 128 (I)(ஐ) பிரகாரம் அரசின் நடவடிக்கை எடுக்கும் போது எதிர்பார்த்த சிக்கனம் வினைத்திறமை, ஒழுங்கானதன்மை மற்றும் நேர்மையானதன்மை போன்ற விடயங்கள் தொடர்பாக உரிய கவனத்துடன் நடவக்கை எடுக்க வேண்டியதுடன் மேலதிகமாக செலவிட நேர்ந்த பொது நிதியை பொறுப்புவாய்ந்த தரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டும்.

(உ) **சர்வதேச மீனவ முகாமைத்துவ நடவடிக்கைகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்காக அபாய கொடுப்பனவு வழங்குதல்**

(i)	திணைக்களத்தின் சர்வதேச மீனவ முகாமைத்தவ நடவடிக்கைகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்காக அபாய கொடுப்பனவு வழங்குதல் மற்றும் அந்த உத்தியோகத்தர்களுக்கு ஆயுள் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்காக 2016 ஜுலை மாதம் 21 திகதிய இலக்கம் அப/16/0333/725/006 கொண்ட அமைச்சரவை முடிவினால் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தின் சர்வதேச மீனவ நடவடிக்கைகளில் ஈடுபடும் 12 துறைமுக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதான அலுவலகத்தின் குறித்த கடமைகள் செய்யும் பிரிவுகளிற்காக 147 உத்தியோகத்தர்களிற்காக ஒரு உத்தியோகத்தரிற்கு ரூபா 5,000 வீதம் மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்க மற்றும் ரூபா 2.5 மில்லியனான காப்புறுதியொன்றை வழங்க அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவை வழங்குவதற்காக குறைந்தபட்சம் ஒரு வாரத்தில் இரண்டு இரவு நேர பணிகளை அல்லது வார இறுதியில் இரண்டு அரை நாட்கள் அல்லது இரவு நேர பணியொன்றுடன் வார இறுதி அரைநாலொன்றாக குறித்த உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் புலனாய்வு பிரிவு மற்றும் சர்வதேச மீனவ பிரிவின் கடமையில் ஈடுபட்டுள்ள 11 உத்தியோகத்தரினால் ஒரு வாரத்திற்கு அல்லாது ஒரு மாதத்திற்கு கடமையாற்றிய இரண்டு இரவு நேர பணி அல்லது வாரஇறுதி இரண்டு அரை நாட்கள் அல்லது இரவு நேர பணியுடன் வாரஇறுதி ஒரு அரைநாள் ஆக கடமை மேற்கொண்டதற்காக 2024 ஆண்டில் ரூபா 510,000 ஆன படிகளை செலுத்தப்பட்டு இருந்தது. அவ்வாறே அமைச்சரவை தீரமானத்தினால் அங்கீகரித்த காப்புறுதியை 2025 மே 20 திகதி வரை பெற்றிருக்கவில்லை.	கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் சர்வதேச மீன்பிடி நடவடிக்கைகள் அலகின் இரவுநேர பணியில் ஈடுபடும் உத்தியோகத்தரினால் வாரத்திற்கு 24 மணித்தியால இரவுநேர இரண்டு பணிகள் மாத்திரம் செய்யப்படுகின்றது. 2024 ஆண்டினுள் இரவுநேர பணி உத்தியோகத்தர்கள் சுமார் ஐந்து பேர்கள் ஒவ்வொறு வாரத்திலும் இரவுநேர பணி இரண்டு வீதம் மேற்கொண்டு ஐந்து ஆயிரம் ரூபா படிகளிற்கு தகைமை பெற்றுள்ளனர். அந்த அலகில் மற்றும் புலனாய்வுப் பிரிவில் 6 உத்தியோகத்தர்கள் இரவுநேர பணிகளை மேற்கொள்ளாது வாரஇறுதி பணிகளில் மற்றும் மிகவும் அத்தியசிய சர்வதேச மீன்பிடி நடவடிக்கை கடமையில் இரவில் அல்லது நாளின் எந்தநேரத்திலும் வீட்டிலிருந்து மேற்கொள்வது தொடர்பாக திருப்தியடைந்து கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த படிகளிற்குரிய அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்படும் குறிப்பிடப்படும் தேசிய சம்பளம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழு அறிக்கை இந்த அமைச்சரவை பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அமைச்சரவை அலுவலகத்தினால் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சிற்கு அனுப்பிய கடிதக் கோவையில்	அமைச்சரவை தீர்மானம் மற்றும் உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		இணைக்கப்பட்டிருக்கவில்லை.	
(ii)	2016 ஜுன் 22 திகதிய இலக்கம் Circular/DFAR/HSFU/2016/06 கொண்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை பிரகாரம் அந்த உத்தியோகத்தரினால் முன் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கடமை நாட்குறிப்பை பேணியிருக்கவில்லை.	2024 ஆண்டிற்காக கடமை தினக்குறிப்பு புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர்களிற்கு வழங்கவில்லை எனவும் அதன் பிரகாரம் அந்த ஆண்டில் சனவரி முதல் ஜுலை வரையான ஒவ்வொறு மாதத்திற்கும் உரிய களத்துறை கடமைகளில் ஈடுபடுவதற்குரிய பதிவேடுகளின் பிரதிகள் உள்ளன.	பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	செயலாற்றுகையை மதிப்பிடுவதற்காக கட்டாய தேவைப்பாட்டை நிறைவு செய்துள்ளனவா என பரீட்சித்திருக்காததுடன் புலனாய்வு பிரிவின் உத்தியோகத்தர்களினால் 2024 ஆண்டில் இந்த படிகளை பெற்றுக் கொள்ளும் போது சில மாதங்களில் மேலதிக கடமையில் ஈடுபட்டிருக்காத போதும் படிகள் செலுத்தப்பட்டுள்ளன.	2024 ஆண்டில் இந்த படிகளை வழங்கும் போது குறித்த காலப்பகுதியில் அதிகாரமளிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர்னால் இந்த உத்தியோகத்தர்களிற்கு ஒப்படைத்திருந்த கடமை மற்றும் அந்த கடமைகளை வினைத்திறனாகக மேற்கொள்வது தொடர்பாக திருப்தியடைந்ததன் மீது இந்த படிகளை வழங்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	முன்னேற்ற அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் மேலதிக கடமை மேற்கொள்ளப்பட்டுள்ள தன் மீது படிகளை செலுத்த வேண்டும்.

(ஊ) மீன்களை ஒன்றுதிரட்டும் சாதனங்களை (FAD) இஸ்தாபித்தல்

(i)	கொக்கல மீன்களை ஒன்றுதிரட்டும் சாதனங்களை ரூபா 7.1 மில்லியனிற்கு 2024 செப்டம்பர் 27 திகதி முதல் ஓராண்டு காலத்திற்கு இல்ஙகை காப்புறுதி கம்பனியில் எதிர்பாராது ஏற்படும் சேதம் மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்படும் சேதங்களை (accidental damages and damage due to adverse weather) மேவுகை செய்து தவணை ரூபா 302,406 வீதமாக காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. கொக்கல பிரதேசத்தில் 2024 நவம்பர் 06 திகதி இஸ்தாபிக்கப்பட்ட சாதனங்கள் (FAD) 2025 சனவரி 14 திகதி காணாமல் போயிருந்ததுடன் காப்புறுதி கம்பனியிடமிருந்து காப்புறுதி உரிமையை கோரி கணக்காய்வு	காப்புறுதி உரிமையை பெற்றுத்தராதது தொடர்பாக முறைப்பாடொன்றை 2025.08.13 திகதி காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்குஅனுப்பப் பட்டுள்ளது.	ரூபா 7.1 மில்லியனான நட்டத்தை காப்புறுதி கம்பனியிடமிருந்து மீள்நிரப்பிக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	திகதிய 2025 ஆகஸ்ட் 27 திகதி வரை 07 மாதங்கள் கடந்துள்ள போதும் காப்புறுதி கம்பனியிடமிருந்து எந்தவித பதிலும் கிடைத்திருகக்விலலை. காப்புறுதி கம்பனியிடமிருந்து பதிலை பெற்றுக் கொள்ள மற்றும் சாதனங்களிற்காக இழப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொள்ள திணைக்கள முகாமைத்துவத்திற்கு இயலாதிருந்ததுடன் 2025 ஆகஸ்ட் 27 திகதி வரை அதற்காக செலவிட்ட கிரயமான ரூபா 7,914,548 இலிருந்து அரசிற்கு நட்டமொன்று மற்றும் அதனூடாக எதிர்பார்த்த நலன்களை மீனவ மக்களிற்கு பெற்றுக் கொடுக்க இயலாதிருந்தது.		
(ii)	இலங்கையினுள் இரண்டாம் மீன்களை ஒன்றுதிரட்டும் சாதனங்களை (FAD) நீர்கொழும்பு பிரதேசத்தில் 2025 ஜுலை 11 திகதி இஸ்தாபித்துள்ளதுடன் அதற்காக செலவிட்ட மொத்த தொகை ரூபா 5,853,486 ஆனதுடன் அதனை காப்புறுதி செய்திருக்கவில்லை. திணைக்களத்தினால் 2025 மே 19 திகதியாக கப்புறுதி கம்பனிக்கு அனுப்பிய ‘‘கொக்கல மீன்களை ஒன்றுதிரட்டும் சாதனங்கள் (FAD) காணாமல் போனது தொடர்பான சம்பவ அறிக்கை’’ இன் பிரகாரம் எதிர்காலத்தில் இஸ்தாபிக்கப்படும் இந்த சாதனங்களின் பாதுகாப்பு தொடர்பாக அந்த அந்த பிரதேசங்களின் மீன்பிடி அமைப்புக்களுடன் உடன்படிக்கை செய்வதனை பரிந்துரைத்திருந்த போதும் நீர்கொழும்பில் இஸ்தாபிக்கப்பட்ட சாதனங்களிற்காக மீன்பிடி அமைப்புக்களுடன் கணக்காய்வு திகதிய 2025 ஆகஸ்ட் 27 திகதி வரை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை.	நீர்கொழும்பில் மீன்களை ஒன்றுதிரட்டும் சாதனங்களை காப்புறுதி செய்வதற்காக விலைமனு கோரிய போதும் எந்தவொரு காப்புறுதி கம்பனியும் இதற்காக முன்வரவில்லை. 2025.07.01 திகதி இடம்பெற்ற அமைச்சின் நிறுவன தலைவர்களின் கூட்டத்திற்கு அறிவித்த பின்னர் இச் செயற்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக பிரச்சினையொன்று ஏற்படுவதால் காப்புறுதி செய்யாது தற்போது நிறைவு செய்துள்ள சாதனங்களை இஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டது. குறித்த உடன்படிக்கை வரைவு செய்யப்பட்டு குறித்த சங்கத்துடன் கலந்துரையாடி கையோப்பமிட ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சாதனங்களை இஸ்தாபித்து மூன்று மாதங்கள் சென்ற பின்னர் இந்த உடன்படிக்கைக்கு உட்பட நடவடிக்கை எடுக்கப்படும்.	குறித்த மீன்பிடி அமைப்புக்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சாதனங்களிற்கு ஏற்படும் சேதத்தை குறைத்துக் கொள்ள முறையான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும்.

(எ) அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு மீதான இணக்கக் கூற்று

(i)	2021 ஆகஸ்ட் 11 ஆம் திகதி முதல் சேவையை விட்டுச் சென்றிருந்த அலுவலக சேவை ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 231,597 ஆன மீதியொன்று நிலவியதுடன் அது 3 ஆண்டுக்கு அதிக காலமாக அறவிட வேண்டியதாக இருந்த போதும் குறித்த உத்தியோகத்தர் இடமிருந்து அத் தொகையை அறவிடுவதற்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தரின் கடன் மீதியை அறவிடுவது தொடர்பாக சட்டமா அதிபரிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது.	கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து.	பரிந்துரை.
(அ)	திணைக்களத்தின் சிரேஷ்ட மட்ட 09 பதவிகளுக்குரியதாக 20 வெற்றிடங்களும், மூன்றாம் மட்ட 02 பதவிகளுக்குரியதாக 09 வெற்றிடங்களும், இரண்டாம் மட்ட 12 பதவிகளுக்குரியதாக 271 வெற்றிடங்களும், ஆரம்ப மட்ட 02 பதவிகளுக்குரியதாக 04 வெற்றிடங்களும் காணப்பட்டன. அதன் பிரகாரம் சிரேஷ்ட மட்டமும் உட்பட 25 பதவிகளுக்குரியதாக 304 வெற்றிடங்கள் காணப்படுவது திணைக்களத்தின் பிரதான பணிகளை மேற்கொள்ளும் போது தடையாக இருந்தது.	சிரேஷ்ட மட்ட பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கடமை மேவுகைக்காக உத்தியோகத்தரைகளை நியமனம் செய்வதற்கம் புதிய ஆட்சேர்ப்பதற்காக பரீட்சை நடாத்தி நேர்முகப்பரீட்சைக் குழுக்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இரண்டாம் மட்ட பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பரீட்சை நடாத்தவும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைப்பதற்காக கோரிக்கை செய்வதற்கு, ஆட்சேர்ப்பு திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.மேலும் மூன்றாம் மட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர் முகப்பரீட்சை நடாத்த பொது சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிற்து. அதே போன்று ஆரம்ப பிரிவில் வெற்றிடமாக உள்ள சாரதி மற்றும் அலுவலக ஊழியர் சேவையை நிரப்புவது இணைந்த சேவை பணிப்பாளர் நாயத்தினால்டேற்கொள்ளப்படும்.	திணைக்களத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான பதவியணியினர் சேர்க்கப் படல் வேண்டும்.